# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **46**

| | | | |
|---|---|---|---|
| Name: | அப்துல்காதர் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A2, A4, A6, A8, A11, A12, A15, A17,A20, A23 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 25.04.2023**

**முதல் விசாரணை**:

நான் தென்காசியில் மலையான் தெருவில் குடியிருக்கிறேன். நான் கூலக்கடை பஜாரில் அல்மஜுத் ஜுவல்லர்ஸ் என்ற பெயரில் கடை நடத்துகிறேன். நான் காலை 10.30 மணிக்கு கடையை திறந்து 8.00 மணிக்கு கடையை அடைப்பேன். சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் நான் வழக்கம் போல் கடையை திறக்க வரும்போது இரண்டு பிரிவினருக்கு இடையே தகராறு என சொன்னார்கள். எனவே, கடையை திறக்காமல் சென்றுவிட்டேன். சுமார் 4 நாட்கள் கடையை திறக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். இரண்டு பிரிவினர் யார் யார் என்று எனக்கு தெரியாது. எதற்காக தகராறு என்றும் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்குதெரியும் ஆனால் எனக்கு பழக்கம் இல்லை . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார்கள் என்னை விசாரித்தார்கள் என்றும் அவர்கள் விசாரித்தபோது 14.08.2007 ம் தேதி வழக்கம்போல் நான் தினமும் காலை 09.00 மணிக்கு கடையை திறப்பேன் என்றும் அவ்வாறு வழக்கம் போல் நான் கடையை திறந்து வியாபாரத்தை கவனித்துக்கொண்டிருந்தபோது பகல் 10.15 மணிக்கு ரோட்டில் ரெண்டு கோஷ்டியினர் அரிவாள், கத்தி வைத்து ஒருவருக்கொருவர் சண்டைபோட்டு கலகம் செய்தார்கள் என்றும் நான் பயந்து கடையை பூட்டி விட்டு போய் விட்டேன் என்றும் கடையை நான் பூட்டும் நடவடிக்கையில் இருந்ததால் யார் யாரை வெட்டினார்கள் என்று நான் பார்க்கவில்லை என்றும் இருதரப்பிலும் வெட்டுபட்டு இறந்தார்கள் சிலருக்கு காயம் என்றும் கேள்விப்பட்டதாகவும் இது சம்பந்தமாக சேரன்மாதேவி காவல் துணை கண்காணிப்பாளர் தன்னை விசாரித்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**